பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 01 வியாழக்கிழமை (18.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 322

# மன்னார் தமிழ் மக்களை அரசு ஷெல்வீச்சு நடத்தி பலவந்தமாக வெளியேற்றியது!



## மூத்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்ரோபர் 18

மன்னார்த் தமிழ் மக்கள் மீது ஷெல் வீச்சு நடத்தி, அவர்களை அங்கிருந்து பலவந்தமாக அரசு வெளியேற்றியது. இது அப்பட்டமான, மிகப் பெரிய மனித உரிமை மீறலாகும். இலங்கை மனித உரிமை மீறல்களைப் பற்றிக் உதாரணம் காட்ட வேண்டுமெனில் மன்னாரில் நடந்ததைக் கூறலாம்.

இவ்வாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார் மூத்த மனித உரிமைகள் செயற் பாட்டாளரான நிமல்கா பெர்னாண்டோ.

கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி மன்னார், சிலாவத்துறை மீது ஷெல் வீச்சு நடத்தி, விடுதலைப் புலிகளிடம் இருந்து அந்தப் பிரதேசத்தை மீட்டுவிட்டதாக அரசாங்கம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

சுமார் நான்கு நாள்கள் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பின்றி ஷெல் வீச்சுக்களை நடத்தி, முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவை அரசாங்கப் படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாகக் கூறியிருந்தன.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் விமானத் தாக்குதல்

கொழும்பு, ஒக். 18

கிளிநொச்சியின் கிழக்கே விமானப் படையினால் நேற்று விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. நேற்று புதன்கிழமை காலை 6 மணியளவில் வன்னி வான்பரப்பினுள் நுழைந்த மிக் விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளன என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன. எனினும் சேதவிவரங்கள் பற்றிய தகவல்கள் எவையும் வெளிவரவில்லை.

## வடமராட்சி சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டனர்

பருத்தித்துறை, ஒக்.18

இம் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் மேற்கொண்டிருந்த பணிப்புறக் கணிப்பை வடமராட்சி பிரதேச சட்டத்தரணிகள் நேற்றுக்கை விட்டனர்.

சட்டத்தரணிகளுக்கு தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலையடுத்து சட்டத்தரணிகள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக நீதிமன்றச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

தமக்குள்ள அச்சுறுத்தல்குறித்து சட்டத்தரணிகள் பருத்தித்துறை நீதிபதியின் கவனத்துக்குக்கொண்டு வந்திருந்தனர்.

பருத்தித்துறை நீதிபதி க. அரியநாயகம் எடுத்த நடவடிக்கை காரணமாக கப்பம் கோரிய மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதை அடுத்து சட்டத்தரணிகள் தமது பணிப்புறக் கணிப்பை நேற்றுக் கைவிட்டனர்.

வழக்கு விசாரணைகள் வழமைபோல் நேற்று இடம்பெற்றன. நீதிபதி க.அரியநாயகம் எடுத்த நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்து சட்டத்தரணிகள் சங்கம் நேற்று அறிக்கை ஒன்றைவிடுத்துள்ளது. (1-218)

## இராணுவத்துக்கு ஆயுத தளபாடங்கள் ஏற்றிச்சென்ற 'கொன்ரெயினர்' விபத்தில்!

கொழும்பு,ஒக்.18

கொழும்பிலிருந்து அதன் புறநகர்ப் பகுதியான பனாகொட இராணுவத்தளம் நோக்கி ஆயுதத் தளபாடங்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த படையினரின் கொன்ரெயினர் வாகனமொன்று பத்தரமுல்ல - கொஸ்வத்த சந்தியில் விபத்துக்குள்ளானது.

நேற்று விடிகாலை 5.30 மணியளவில் நிகழ்ந்த இந்த விபத்துச் சம்பவத்தால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

கொட்டாவ வீதியில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த 'கொன்ரெயினர்' கொஸ்வத்த சந்தியால் திரும்பிய தருணத்தில் நிலைதடுமாறியது என்றும், ஆயுதங்கள் ஏற்றப்பட்ட 'கொன்ரெயினர்' அசையாமல் அப்படியே நிற்க, வாகனத்தின் இயந்திரம் மாத்திரம் விலகி உருண்டு புரண்டு என்றும் சம்பவ இடத்திலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் மதுபான விற்பனைக் கடையொன்று உள்ளது என்றும், கொன்ரெயினர் இயந்திரம் அதனுடன் மோதாமல் தப்பியதால் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தைத் தொடர்ந்து குறித்த இடத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தைப்பொங்கல் தினத்தன்று புலிகள் தமிழீழப் பிரகடனம் செய்யத் திட்டம்

### மீண்டும் சொல்கிறார் அமைச்சர் ஜெயராஜ்

எதிர்வரும் தைப்பொங்கல் நாளில் தமிழீழப்பிரகடனத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிடுவர் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இது குறித்து அவர் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழப் பிரகடனத்தை வெளியிடத் தீர்மானித்திருக்கின்றனர். முதலில் ஜனவரி 18 ஆம் திகதி பிரகடனம் வெளியிடப்படவுள்ளது என்று கூறியிருந்தேன். ஆனால், எமக்குத் தற்போது கிடைத்துள்ள தகவல்களின்படி 14ஆம் திகதி தைப்பொங்கல் நாளன்றே தமிழீழப் பிரகடனத்தை செய்ய விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கான அறிவிப்பை பிரபாகரன் எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் நாள் தனது மாவீரர் நாள் உரையில் வெளியிடுவார்.

விடுதலைப் புலிகளின் இந்தத் திட்டம் குறித்து இந்தியாவும், அனைத்து நாடுகளும் கவனித்துக்கொண்டுதான் இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் இந்தத் திட்டத்துக்கு அனைத்துலக நாடுகளும் அனுமதிக்காது. அதற்கான உறுதிமொழிகளை அந்த நாடுகள் எமக்கு வழங்கியுள்ளன. இலங்கை அரசும் இதனை அனுமதிக்கப்போவதில்லை - என்றார் அவர். (சி)

## இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவி வழங்கினால் யுத்தம் நீடித்துச் செல்லும்

### மனோகணேசன் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 18

இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவி வழங்குவதால் யுத்தம் நீடிக்க வழிவகுக்கும்.

மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த நான், சிறிலங்காவுக்கு இந்தியா ஆயுத உதவி செய்வது குறித்து கவலை அடைகிறேன். வெட்கப்படுகிறேன். இது மிகவும் அபாயகரமானதாகும். இந்தியாவை எனது தந்தை நாடாகவும் இலங்கையை தாய்நாடாகவும் கருதுகிறேன்.

இந்தியாவின் ஆயுத உதவியால் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நீடிக்கும் - என்றார் அவர். (அ-1)

## கொட்டாஞ்சேனையில் வர்த்தகர் கடத்தல்

கொழும்பில் தமிழ் வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கடத்தப்பட்டுள்ளார். கொச்சிக்கடையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான இராசலிங்கம் சிறிகாந்தன் (வயது-35) என்பவர் கடத்தப்பட்டுள்ளார் என காணாமல் போனோரைக் கண்டறியும் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொச்சிக்கடையில் இருந்து வெள்ளவத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு எதிரான ஜே.வி.பியின் மனு நேற்றுத் தள்ளுபடி

கொழும்பு, ஒக். 18

வரவு-செலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று உயர் நீதிமன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டன.

ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு எதிராக ஜே.வி.பி. உள்ளிட்ட அமைப்பினர் தாக்கல் செய்த மனுக்கள் நேற்று உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டன.

ஒதுக்கீட்டு சட்டமூலத்தில் உள்ள சில சரத்துக்கள் அரசியல் அமைப்புக்கு ஏற்புடையதாக இல்லை என்று மனுத் தாக்கல் செய்தவர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எனவே, ஒதுக்கீட்டு சட்டமூலத்தை ரத்துச் செய்யவேண்டும் என்று நீதிமன்றை அவர்கள் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் ஒதுக்கீட்டு சட்ட

(08ஆம் பக்கம் பார்க்க)

## யால சரணாலய தேடுதலின்போது நிலக்கண்ணியில் சிக்கி மூவர் காயம்

கொழும்பு, ஒக். 18

யால வனச் சரணாலயப் பகுதியில் அதிரடித் தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகளைத் தேடும் நடவடிக்கையின்போது நிலக்கண்ணியில் சிக்கி வனத்துறையைச் சேர்ந்த இருவரும் படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவரும் காயமடைந்தனர்.

யால வனச் சரணாலயப் பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் தேடுதல் நடவடிக்கையில் படையினரும், வனத்துறையினரும் ஈடுபட்டனர். இதன் போது நிலக்கண்ணிவெடியில் வனத்துறையினரும் படையினரும் சிக்கினர்.

இதில் வனத்துறையைச் சேர்ந்த இருவரும், படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவருமாக மூவர் காயமடைந்துள்ளனர்.

யால சரணாலயப் பகுதியில் வனத்துறை அதிகாரியின் அலுவலக அறையும் தீ மூட்டி எரியூட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட சில பகுதிகளில்தான் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், ஏனைய பகுதிகளில் தேடுதல்களை மேற்கொள்வதற்கு மேலதிக படையினர் வரவழைக்கப்பட்டுள்ளனர் எனவும் படைத்தரப்பு தெரிவித்தது. (சி)

Digitized by noolaham.org | aavanaham.org

## யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை
## திருமதி பிறேம்குமாரி கலைநாதன்



16.10.2007 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

ஆரம்பக்கல்வி:-
புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்
இடைநிலைக் கல்வி:-
யாழ். இந்து மகளிர் கல்லூரி

**சேவை விவரம்**

| | |
|---|---|
| வவுனியா பெரியதம்பனை மகா வித்தியாலயம் | 2.9.74 - 9.2.76 |
| யா/புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயம் | 10.2.76 - 30.6.79 |
| பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை | 1.1.79 - 31.12.81 |
| யா/புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயம் | 1.1.82 - 4.1.95 |
| யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி | 5.1.95 - 15.10.2007 |

எமது கல்லூரியில் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி பிறேம்குமாரி கலைநாதன் அவர்களது அளப்பரிய சேவையைப் பாராட்டுவதுடன், அவர் மேலும் சிறப்புப்பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நலன்புரிக் கழகம்,
யாழ். இந்துமகளிர் கல்லூரி.

(67168)

---

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நரையிரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔடதம்.

**சித்தாரா**

**அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

**யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-54023)

---

## கண்ணீர் அஞ்சலி



கரவெட்டி ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் கிளை முகாமையாளரும் பணியாளர் நலன்புரிச்சங்கம், கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினருமாகிய சு.சுகேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

**தம்பர் சுப்பையா** அவர்கள்

15.10.2007 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கரவெட்டி
ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்கம்
கொடிகாமம் வீதி,
நெல்லியடி.

பணியாளர் நலன்புரிச் சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்.

(67164)

---

MINISTRY OF CONSTRUCTION AND ENGINEERING SERVICES,

## DEPARTMENT OF BUILDINGS

## INVITATION FOR BIDS

### CONSTRUCTION OF EXTENSION TO COMPUTER UNIT, UNIVERSITY OF JAFFNA (Balance Work)

1. **The Chairman, Regional Procurement Committee, Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for the above works estimated at a cost of Rs 4.6 Mn. The construction period is 90 days.
2. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
3. To be eligible for contract award the successful Bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for Grade. M7/C8 or above with the Institute for Construction Training and Development (ICTAD)
4. Interested Bidders may obtain further information from the **Chief Engineer's Office (Jaffna) Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9.00 hrs to 16.00 hrs** up to.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer (Jaffna), Department of Buildings from 19-10-2007 until 31.10.2007 between 09.00 hrs to 15.00 hrs upon payment of a non refundable fee of Rs. 1000/=
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** at or before 10.00 hrs 02.11.2007.
7. All bids shall be accompanied by a Bid Security for an Amount of Rupees Sixty Nine Thousand (Rs.69,000/=) which should be valid up to 21 st January 2008.
8. Bids shall be valid for a period of 63 days from the deadline for submission of bids.
9. Bids will be opened soon after closing in the presence of bidders or their authorized representatives at the **Chief Engineer's Office (Jaffna) Department of Buildings, Beach Road, Gurunager Jaffna.**

**Ananda C Yapa,**
Deputy Director (Planning & North ) Division,
Department of Buildings
"Sethsiripaya", Battaramulla.
www.buildings.gov.lk

(C/54025)

---

## வீடு விற்பனைக்கு

இல. 45, சீனிவாசகம் வீதி, கொட்டடியில் ஒரு பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 2229083, 2225035, 0779790816.

---

## புத்தகம் கட்டுநர் (Book Binders)
### பணியாளரும் பயிலுநரும் தேவை

புத்தகம் கட்டுநர் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வாழும் பெண்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

மாநகரசபை எல்லைக்குள் வாழும் பெண்கள் மட்டுமே பயிலுநர்களாகத் தெரிவு செய்யப் பெறுவர்.

கல்வித் தகைமை கட்டாய தேவையாகக் கருதப் படமாட்டாது.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின்
ஆசிரியர்களான
திருமதி ம. ஜெயரஞ்சினி
அவர்களின் தந்தையும்,
க. மயில்வாகனம் அவர்களின்
மாமனுமாகிய
கந்தப்பிள்ளை நடராசா
அவர்கள்
16.10.2007 அன்று
காலமானதையிட்டு எமது
ஆழ்ந்த அனுதாபங்களையும்,
கண்ணீர் அஞ்சலியையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்..

ஆசிரியர் கழகம்,
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(66174)

---

## கண்ணீர் அஞ்சலி



சிறிலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் ஓய்வுபெற்ற மின் முகாரியும் மிகவும் கஷ்டமான காலங்களில் தோளோடு தோள் கொடுத்த எங்கள் குடும்ப நண்பருமான

**நா.நடராசா**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து கலங்குகின்றோம். அன்னாரின் மறைவால் ஏற்பட்ட இழப்புக்கு மனம்வருந்துவதுடன், எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை அவரின் குடும்பத்தாருடன் பகிர்ந்துகொள்ளுகின்றோம்.


க. தர்மகுலசிங்கம்,
சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி,
சீமெந்துக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

114, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

(சி-54029)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 29 |
| 07 | 09 |
| 1976 | 2006 |

## இராசரத்தினம் அன்பழகன்
(ஹலோரெஸ்ட் நிறுவன ஊழியர்)

காலையிலே நீங்கள் சென்றதை - காலனவன்
பாதையிலே கண்டானோ?
காலனவன் கவர்ந்து சென்றது கனவாகி போகாதோ?
உங்கள் முகம் காணாமல் மழலை தவிக்கின்றான்
மழலை முகம் பார்க்க மீண்டும் தரணியிலே உதிப்பீர்களா?
அன்பு என்று செல்லமாக அழைத்திட -
நீங்கள் அருகில் இல்லையே
ஆண்டு ஒன்று ஆனது ஆறவில்லை எம் துயரம்!

V.H.லேன்,
இருபாலை.

உம் பிரிவால் வாடும்
மனைவி (பவித்திரா),மகன் (ஷைலஜன்).

---

## துயர் பகிர்வு



### அப்புத்துரை குணசேகரன்

(சிறைச்சாலை அத்தியட்சகர் S.P., மட்டக்களப்பு)
அவர்கள் 15.10.2007 அன்று கொழும்பில் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு, அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

சிறிலங்கா சிறைச்சாலை,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

அத்தியட்சகர்,
சிறைச்சாலை ஊழியர்கள்.

(67165)

---

## மரண அறிவித்தல்



### கந்தப்பிள்ளை நடராசா

சாயுடை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வங்கியடி, இணுவில் கிழக்கை வசிப்பிடமாவும் கொண்ட கந்தப்பிள்ளை நடராசா (16.10.2007) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் கணவரும் ஜெயரஞ்சினி (ஆசிரியை, மகாஜனக்கல்லூரி), ஜெயராசா (கொழும்பு), வசந்தா (சண் கல்வி நிலைய நிர்வாகி, உரும்பிராய்), கனகராசா (வரதன் றைக்கோடிங்பார், இணுவில்), சாந்தி, கலாராணி (ஆசிரியை, குப்பிளான் விக்னேஸ்வரா ), ஆனந்தராசா (வவுனியா கல்வியற்கல்லூரி பயிற்சி ஆசிரியை - பிறமண்டு மகா வித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும் மயில்வாகனம் (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி), சரிதா, சுகந்தினிதேவி, விசியராசா, கிருபா, சுகர்ணராஜ் ஆகியோரின் மாமனும் இனியாள், சகானா, மொழியரசி, நதியா, மனாசி, நபீசா, தமிழினி, யுகந்தினி, யக்சிகா, தேசிகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (17.10.2007) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(67163)

---

## சான்றிதழ் வைபவம்

தொழிற்றுறைத் திணைக்களத்தால் நல்லூர், நாவலர் கலாசார மண்டபத்தில் ஒக்ரோபர் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட மாகாண தொழிற்றுறை கண்காட்சியில் பரிசு பெற்றவர்களுக்கு இன்று 18ஆம் திகதி வியாழக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் பி.ப. 2 மணிக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெறவுள்ளது. பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர், விவரங்கள் வருமாறு.

| பெயர் | முகவரி |
|---|---|
| க.தாரணி | சங்கானை. |
| ஆ.குமாரி | காளிங்கன் ராஜன் லேன், நல்லூர். |
| சே.சுகிர்தா | சங்கானை. |
| த.நடனமலர் | சங்கானை. |
| வி.சரோஜினி தேவி | தும்பு நிலையம், கொழும்புத்துறை |
| நிர்மலாதி | துன்னாலை தும்பு நிலையம் |
| க. மாலினி | துன்னாலை தும்பு நிலையம். |
| சி. தேவிகா | தும்பு நிலையம், கொழும்புத்துறை. |
| இ.ராஜநிர்மலா | செந்தோம்ஸ்லேன், பருத்தித்துறை. |
| லூட்ஸ் சுமணா | செந்தோம்ஸ்லேன், பருத்தித்துறை. |
| சே. மேரி லூட்ஸ் ஜெனிற்றா | செந்தோம்ஸ் லேன், பருத்தித்துறை. |
| சுதர்சினி | செந்தோம்ஸ் லேன், பருத்தித்துறை. |
| தி. விருசினி | இணுவில் கிழக்கு. |
| செ. ரஞ்சிதவேணி | பருத்தித்துறை. |
| ரி. சுஜீபன் | 109, நாயன்மார் வீதி, நல்லூர். |
| ரி. சுஜீபன் | 109, நாயன்மார் வீதி, நல்லூர். |
| யோ. சிவகலா | பத்திரகாளி கோவில் வீதி, பருத்தித்துறை. |
| எஸ். சுகன்யா | அளவெட்டி மத்தி |
| சு. விஜிதா | கம்பர்மலை, வல்வெட்டித்துறை. |
| உ. சுகாயினி | அளவெட்டி. |
| ப. கலைநாதன் | பெண்கள் பண்பாட்டு மையம், கந்தர்மடம். |
| கோர் நிறுவனம் | வேலணை. |
| ரி. தனு | சங்கத்தானை, சாவகச்சேரி. |
| சு. வசந்தலா | [illegible] |
| பு. மீரா | நீர்வேலி வடக்கு. |
| ப. காயத்திரி | பொன்னாலை வீதி, சங்கானை. |
| ச. விஜிதா | கம்பர் மலை, வல்வெட்டித்துறை. |
| அ. செல்வநாதன் | 18, பேரின்பநாயகம் வீதி, யாழ்ப்பாணம். |
| சாருபா | 3 ஆம் கட்டை, கல்வியங்காடு. |
| ப. காயத்திரி | பொன்னாலை வீதி, சங்கானை. |
| [illegible] | பெண்கள் பண்பாட்டு நிலையம். |
| ப. உ... [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |
| அ. செல்வநாதன் | 18, பேரின்பநாதன் வீதி, யாழ்ப்பாணம். |
| ச. சரிகுமாரி | சங்குவேலி வடக்கு. |

| பெயர் | முகவரி |
|---|---|
| ச. விஜிதா | கம்பர்மலை, வல்வெட்டித்துறை. |
| க. நிஷாஜினி. | 122, கோயில் வீதி, நல்லூர். |
| க. சுதர்சலா | [illegible], மல்லாகம். |
| எஸ். நாகேஸ்வரி | நவாலி தெற்கு, மானிப்பாய். |
| எஸ். நாகேஸ்வரி | நவாலி தெற்கு, மானிப்பாய். |
| த. சிவராகவன் | மகேசன் வீதி, நவாலி. |
| மாலா மாத் தொழிற்சாலை | தெல்லிப்பழை. |
| மாலா மாத் தொழிற்சாலை | தெல்லிப்பழை. |
| சா. பரஞ்சோதி | மரவேலை பயிற்சாலை, சுன்னாகம். |
| ரசிகன், சுதர்சன் | மரவேலை பயிற்சாலை, மானிப்பாய். |
| தெ. நிதர்சன் | மரவேலை பயிற்சாலை, மானிப்பாய். |
| மாலா மாத் தொழிற்சாலை | தெல்லிப்பழை. |
| மாலா மாத் தொழிற்சாலை | தெல்லிப்பழை. |
| [illegible] | [illegible] வீதி, [illegible]. |
| [illegible], க. ரசிகரன் | மரவேலை பயிற்சாலை, மானிப்பாய் |
| சா. பரஞ்சோதி | மரவேலை நிலையம், சுன்னாகம். |
| வ. மகேசநாதன் | சங்கானை |
| [illegible] | 304, பருத்தித்துறை வீதி, [illegible]. |
| சி. சந்திரமோகன், | செல்லையா வீதி, அல்வாய். |
| மா. இலட்சுமி காந்தன், | அல்வாய் தெற்கு. |
| ர. பிரகாஷ், | கோப்பாய் தெற்கு. |
| [illegible] | தொழிற்பயிற்சி நிலையம், தெல்லிப்பழை. |
| ச. சாருபா, | 3 ஆம் கட்டை, கல்வியங்காடு. |
| ச. அருள்மோகன், | [illegible] |
| ச. [illegible], | [illegible] வீதி, நவாலி. |
| த. சிவகுமாரன், | [illegible], பருத்தித்துறை. |
| சாந்தகுமாரி, | மானிப்பாய். |
| சாந்தகுமாரி, | மானிப்பாய். |
| [illegible], | அளவெட்டி வடக்கு. |
| ஜே. [illegible], | [illegible] வீதி, நல்லூர். |
| க. ரஞ்சினிதேவி, | [illegible] |
| எஸ். [illegible], | நீர்வேலி வடக்கு. |
| ஏ. ரேணுகா, | [illegible], மல்லாகம். |
| த. [illegible], | தெல்லிப்பழை. |
| நாகேஸ்வரி, | நவாலி தெற்கு, மானிப்பாய். |

தொழிற்றுறைத் திணைக்கள
மாவட்ட அலுவலர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

(67172)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் பாதிப்புற்ற குழந்தைகளுக்கு விசேட போஷாக்கு உணவு வழங்கிச் சிகிச்சை

யாழ்ப்பாணம். ஒக். 18

யாழ். மாவட்டத்தில் குறுகியகால போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு போஷாக்குச் சிகிச்சை அளிக்கும் திட்டத்தை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினர் ஆரம்பித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென யுனிசெப் அமைப்பு வழங்கியுள்ள BP100, பிளம்பி நட் ஆகிய விஷேட போஷாக்குணவுகள் மூலமே இந்தச் சிகிச்சை வழங்கப்படுகின்றது.

இவ் வருட ஆரம்பத்தில் சகல நலன்புரி நிலையங்களிலும் தீவகப் பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டம் இம் மாதம் முதல் மாவட்டம் முழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் போஷாக்கு மேம்பாட்டிற்காக சுகாதாரத் திணைக்களம் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அத்துடன் சுகாதார அமைச்சினால் வழங்கப்படும் திரிபோஷா கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் சுமார் 18 ஆயிரம் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதாகவும்-

உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் கோன் சோயா 70 ஆயிரம் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதாகவும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மேலதிகமாக மாவட்டத்திலுள்ள சகல 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நிறை, உயரம் அளவிடப்பட்டு போஷாக்குக் குறைவென இனங்காணப்பட்ட குழந்தைகளுக்கே விசேட போஷாக்கு மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் யுனிசெப் அமைப்பு வழங்கிய புரதச் சத்துள்ள பிஸ்கட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

## கம்பனை ஆலயத்திற்கு புதிய மடப்பள்ளி

சுழிபுரம், ஒக்.18

சுழிபுரம், கம்பனை அம்பாள் ஆலயத்திற்கென புதிதாக மடப்பள்ளி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் நவராத்திரி விழா முதல் நெய்வேத்திய கருமங்கள் யாவும் புதிய மடப்பள்ளியிலேயே நடைபெறும் எனப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (202-28)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் விவரம்

யாழ்ப்பதணம்,ஒக்.18

கடந்த ஒகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

சில பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு :-

**யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை**

ஜெ.நிருபன் (155), நி.துவாரகன் (155), சி.ஜெயசக்தி (155), பா.கஜந்தினி (154), அ.அங்கவை (154), இ.துவாரகா (154), வி.டய்சிகா (154), சி.கஜன் (154), பா.ஜனவத்ஸசர்மா (153), ப.தர்ஷணன் (153), இ.ஸகிஷ்னா (153), தி.தர்சிகன் (153), ச.ஹரிசங்கர் (153),

நி.கம்சிதா (153), ச.யதுசோபணா (152), கே.கஜ லக்ஷி (152), சி.அபிஷானா (152), த.இந்துஜன் (152), உ.ஜிதுஷன் (152), தெ.நிலக்ஷன் (152), சி.மாதுஷன் (152), நே.கிருத்திகா (152),தே.ஜதீஸன் (152), ஜெ.சங்கீதன் (151), ஜெ.லக்ஷாயினி (151), ஜெ.குகப்பிரஷாதன் (151), த.ஹேதுகா (151), க.கீர்த்தனா (151), வி.ஜானுகா (151), கி.பிருந்தா (150), ச.கிருஷாந் (150), க.சுரேகா (150), பா.தாருசன் (150), ர.யதுஷா (149), கு.யசிந்தினி (149), ம.கஜிந்தன் (149),

க. துர்ஷிகன் (147), த.ஆதவன் (147), கு.திலக்ஷி (146), ர.மகின்ஷா (146), ச.திலக்ஷன் (146), ம.ராகுல் (145), த.தனுஷியன் (145), ம.சுபாஸ்கர் (145), வி.யதுசன் (145), ந.சஞ்சிதா (145), வ.பானுசன் (144), க.ரிஷிவர்மன் (144), சி.டனார்த்தனன் (143), சி.டினார்த்தனன் (143), ப.ரதீஷன் (143), ச.மதிவதனி (142), கே.சுபஹரி (142), த.லவகுசன் (141), வ.டிவாகரன் (141), ஈ.பவித்திரா (140), செ.மயூரிக்கா (140), தே.ரோஜானந்தன் (140), கு.அருள்குமரன் (140), கோ.பிரவீன் (140).

**கொழும்புத்துறை இந்து ம.வித்தி.**

மு.டினேஸ்குமார் (157), து.யலுஜா (157).

# நாவற்குழியில் குடியிருப்புகள் அற்ற வீடுகள் மலசலகூடங்களாக மாறி வருகின்றன

## இதனால் பிரதேசம் எங்கும் துர்நாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் குடியிருப்பு இல்லாத வீடுகள் மலசலகூடங்களாக மாறிவருகின்றன. இதனால் அப் பிரதேசம் எங்கும் துர்நாற்றம் வீசுவதால் பிரதேச மக்கள் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ் வீட்டுத் திட்டத்தில் 168 வீடுகளிலேயே குடியிருப்புகள் உள்ளன. ஏனைய வீடுகள் புனரமைப்புச் செய்யப்படாமல் பாழடைந்து காணப்படுகின்றன.

இந் நிலையில் பாவனையில்லாத வீடுகளை சிலர் மலசலகூடங்களாகப் பாவித்து வருகின்றனர்.

இதனால் பிரதேசம் எங்கும் துர்நாற்றம் வீசுவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து சுகாதாரச் சீர்கேட்டை நிறுத்த வழி செய்ய வேண்டும் எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-207)




யாழ்.நகர் மைய றோட்டரிக் கழகத்தினர் பல்வேறு செயற்திட்டங்களையும் குடாநாட்டில் செயற்படுத்தி வருகின்றனர். இதன் ஓர் அங்கமாக தென்மராட்சியிலுள்ள நான்கு முன்பள்ளிகளுக்குத் தளபாடங்கள், கற்றல் உபகரணங்கள் என்பவற்றை வழங்கப்பட்டன. சாவகச்சேரி உதய சூரியன் முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்விலும், கச்சாய் கலைமகள் முன்பள்ளிக்குத் தளபாடங்கள் வழங்கும் நிகழ்விலும் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

## நவாலி ம.விக்கு இரு நிறுவனங்கள் கல்வி உதவி

யாழ்ப்பாணம், ஒக்.18

நவாலி மகா வித்தியாலயத்திற்கு இரு சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் கல்வி உதவிகளை வழங்கியுள்ளன என வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் சுற்றுமதில் அமைத்தல், பாண்ட் இசைக்கருவி, அலுமாரி, 'பிரிண்டர்', கணனி, மேசை, கதிரை போன்ற தளபாட உதவிக்ளையும் வழங்கியுள்ளது.

யுனிசெப் நிறுவனம் 175 கதிரைகள், மேசை ஆகியவற்றை வழங்கியதுடன் கட்டடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளது.

நவாலி மகாவித்தியாலயத்தின் முன்னாள் முதல்வர்களாகப் பணியாற்றிய அ.அலெக்சாண்டர், பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் ஆகியோரும் பாடசாலை அபிவிருத்திக்கு உதவியுள்ளார்கள் எனவும் அதிபர் மேலும் தெரிவித்தார். (202-95)

## கத்தோலிக்க செய்திமடல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் செய்தி மடலான 'கத்தோலிக்க ஆசிரிய தூதன்' அண்மையில் வைபவ ரீதியாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்.மறைக்கல்வி நடுநிலை மண்டபத்தில் நடைபெற்ற ஆசிரியர் வாண்மை விருத்திக் கருத்தரங்கில் வைத்தே இம் மடல் வெளியிடப்பட்டது.

சங்கத்தின் தலைவர் எவ்.எக்ஸ். அன்ரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென் மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பித்தார். ஆசியுரையை நாவாந்துறைப் பங்குத் தந்தை அருட்திரு.எம்.ஆர்.வி.ரவிச்சந்திரன் நிகழ்த்தினார்.

செய்தி மடலின் முதற்பிரதியை பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு யாவிஸ் அடிகள் பெற்றுக் கொண்டார். (202)

## பொது அறிவுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.18

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சாவகசேரி நகர பொது நூலகத்தினர் மாணவர்களுக்கிடையிலான பொது அறிவுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகள் ஆகியவற்றை அண்மையில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடத்தினர். (202-207)

# சம்பந்தன், செல்லையா விருதுகள்; பேராசிரியர்கள் சத்தியசீலன், நுஃமானுக்கு

யாழ்ப்பாணம். ஒக். 18

யாழ். இலக்கிய வட்டம் வருடாந்தம் வழங்கிவரும் 'சம்பந்தன் விருது' பேராசிரியர் ச.சத்தியசீலனுக்கும் செல்லையா விருது பேராசிரியர் எம்.ஏ. நுஃமானுக்கும் வழங்கப்படவுள்ளன.


சத்தியசீலன்

**சம்பந்தன் விருது**

2006 ஆம் ஆண்டுக்கான சம்பந்தன் விருதுக்கு இம்முறை தெரிவு செய்யப்பட்ட படைப்பாளி பேராசிரியர் ச.சத்தியசீலன்.

இவரது 'மலாயக் குடிப்பெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும்' என்ற ஆய்வு நூல் விருதுக்கும் பரிசுக்குமுரியதாகத் தெரிவாகியுள்ளது.

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக ஈழத்தின் முன்னோடிச் சிறுகதைப் படைப்பாளி சம்பந்தன் பெயரால் வருடா வருடம் இவ் விருது வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் பேராசிரியர் சண்முகதாஸ், கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன், எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், பேராசிரியர் எஸ்.பத்மநாதன், படைப்பாளி சு.வே,பேராசிரியர் சி.மௌனகுரு, பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் இவ் விருதினைக் கடந்த காலங்களில் பெற்றுள்ளனர்.

பேராசிரியர் ச.சத்தியசீலன் கடந்த 32 ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வரலாற்று விரிவுரையாளராக விளங்கி வருகின்றார். கடந்த எட்டு ஆண்டுகளாகப் பல்கலக்கழகத்தின் வரலாற்றுத்துறைத் தலைவராக இருந்து வருகின்றார். தன் துறைசார்ந்த ஏழு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

பல்துறை ஆளுமை கொண்ட பேராசிரியர் இவ்வாண்டுக்கான சம்பந்தன் விருதினைப் பெறுகின்றார். எழுத்தாளர் சம்பந்தனின் மகள் திருமதி திரிவேணி கஜன் இவ்விருதுக்கான பணப்பரிசில் 10 ஆயிரம் ரூபாவை வழங்கி சத்தியசீலனைக் கௌரவிக்கிறார்.

இம் மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருக்கும் விழாவில் சம்பந்தன் விருது வழங்கப்படவுள்ளது. பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில், பேராசிரியர் பொ.பாலசுந்தரம், செஞ். சொற்செல்வர் ஆறு.திருமுருகன், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, செங்கை ஆழியான், நயினை கிருபானந்தா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். சம்பந்தன் விருது அறக்கட்டளை சபையினர் இந்நூலினை விருதுக்குரியதாகத் தெரிவு செய்துள்ளனர்.

**செல்லையா விருது**

2007 ஆம் ஆண்டுக்கான அ.பொ.செல்லையா விருதை பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் பெறுகின்றார். அமரர் அ.பொ.செல்லையா ஆசிரியர் ஈழத்தின் பெருமைக்குரிய கட்டுரையாசிரியர், சமூகவியலாளர். திருக்குறள் குறித்து கவனிப்புக்குரிய நூல்கள் எழுதியுள்ளார். இவரின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் தமிழில் எழுதப்படுகின்ற கட்டுரையியல்சார்ந்த சிறந்த நூலுக்கு 'செல்லையா விருது' வழங்குவதென யாழ்.இலக்கிய வட்டம் முடிவு செய்தது. அந்த விருதுக்கான பணப்பரிசில் ரூபா 10 ஆயிரத்தை அ.பொ.செல்லையாவின் மகன் செந்தில் வழங்குகிறார்.


நுஃமான்

விருது வழங்க முடிவு செய்த முதலாமாண்டில் சான்றோர் அவ்விருதினைப் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் அவர்களுக்கு வழங்கத் தெரிவு செய்திருப்பது அவ்விருதுக்குக் கௌரவமாகும். அவர் எழுதிய 'மொழியும் இலக்கியமும்' என்ற நூல் விருதினைப் பெற்றுக் கொள்கின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கும் எம்.ஏ.நுஃமான் ஒரு புகழ் பூத்த கவிஞர். ஈழத்தின் இலக்கிய விமர்சகராகவும் ஆய்வாளராகவும் உள்ளார்.

27 நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது கவிதைகள் ஆங்கிலம், சிங்களம், கன்னடம் முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பேராசிரியர் நுஃமானுக்குரிய விருது கொழும்பில் நடைபெறவிருக்கும் விழாவில் கௌரவித்து வழங்கப்படவுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 இல் நடைபெற்ற தரம் -5
புலமைப்பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகள்
பெற்றுச் சித்தியடைந்த யா/கொக்குவில்
இந்து ஆரம்ப பாடசாலை மாணவி செல்வி

**ராம்குமார் லக்ஷிகா**

அவர்களை மேன் மேலும் கல்வியில் பல
சிறப்புகள் பெற்றுச் சிறப்புடன் வாழ
வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கமளித்த
அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

P.S.பாலமுருகன் *(நாதஸ்வரம்)*,
செந்தில், சங்கர் *(சித்தப்பாமார்)*,
காயத்திரி *(சித்தி)*,
சாரங்கன் *(தம்பி)*,
தரங்கினி *(தங்கை)*, அப்பம்மா.

*110/14, சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.* (66997)

## நியமனம்

யாழ்.பெரியபுலம் மகா வித்தியாலய அதிபராக சி.இராமலிங்கம் நாளை வெள்ளிக்கிழமை முதல் நியமனம் பெறுகின்றார்.

இவர் பளைக் கோட்டக் கல்வி அதிகாரியாகப் பணி புரிந்தவர்.

ஓய்வுபெறும் அதிபர் எஸ்.கிருஸ்ணகுமாரின் சேவை நலன் பாராட்டு விழாவும் நாளை வித்தியாலயத்தில் இடம் பெறுகிறது.(111)

## அன்பொளி கல்வியகம்

இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை- 2007 சித்தியடைந்த மாணவர்களுக்கான

**பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கல்வி கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 21.10.2007 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறும். மாணவர்களை தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- இயக்குநர்.

*குறிப்பு: இதுவரை பதியத் தவறியவர்கள் உங்கள் பெறுபேறுகளை அலுவலகத்தில் பதிவுசெய்யவும்.* (67158)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி

புலமைப்பரிசில் பரீட்சை- 2007 பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



செல்வன் த.கோமகன்
149 புள்ளிகள்



செல்வி வ.அபினயா
140 புள்ளிகள்

வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவர்களான

| | |
|---|---|
| செல்வன் சா.உதயசாந்தன் | செல்வி யோ.நிருஜா |
| செல்வன் ஜெ. சாத்வீகன் | செல்வி சி.றம்மியா |
| செல்வன் லி.விரிதரன் | செல்வி ஜெ.மாதங்கி |
| செல்வன் வி.கீர்த்தனன் | செல்வி ந.நிதர்சனா |

மேற்படி மாணவர்கள் அனைவரையும் எமது பாடசாலைச் சமூகம் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
(சி/54014) யா/தேவரையாளி இந்துக்கல்லூரி, கரவெட்டி.

## 45 ஆம் நாள் துயர நினைவு



மண் மகிழ
17.12.1978

விண் மகிழ
04.09.2007

**அமரர் யோண்டேவிற் கொஸ்ரா**
**(அனுஷ்ரன்)**

மழலையாய் சீராட்டி வளர்த்த
மலர் வதனத்தை நாம் மறப்போமா?
அழகொளிரும் அன்பே! உமது
அன்பு முகத்தை நாம் மறப்போமா?

கடல் கடந்து நிற்கிறோம் ஐயா!
கதி கலங்கிக் கண்ணீர் வடிக்கின்றோம்
காண்போமா எனப் புலம்பி நிற்கின்றோம்
கண்ணீரைக் காணிக்கையாகத் தருகின்றோம்.

*"உம் ஆன்மா இறைபதம் சேரும்*
*உம் அன்பு எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்"*

A.V.றோர், முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

*பிரிவின் துயரத்தில்:*
மனைவி, பெற்றோர், உடன்பிறப்புகள்,
உற்ற உறவுகள்.

(67157)

## இன்றைய போட்டி

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் வலய மட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு-

16 வயதுப் பிரிவு காலை-8 மணி

* சிவகுரு வித்தி எதிர் சிதம்பராக்கல்லூரி
* ஹாட்லி எதிர் வல்வெட்டி இ.த.க.
* இமையாணன் அ.த.க.எதிர் தேவரையாளி இ.க.

பி.ப.1.30 மணி

* மறைக்காடு றோ. க. எதிர் ஞானசாரியார் கல்லூரி
* அல்வாய் வடக்கு றோ.க. எதிர் உடுப்பிட்டி அ.மி.க.
* பொன்னம்பல வித்தி எதிர் கொற்றாவத்தை அ.மி.க. (50-155)

## பட்டப் படிப்புகள் பீடம் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோருகிறது

யாழ்ப்பாணம், ஒக். 18


யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் கல்வியாண்டு 2005/2006 இற்குரிய அனைத்து கற்கை நெறிகளுக்குமான இரண்டாம் அரை ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதே வேளை-வவுனியா, வளாகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறியைக் கல்வியாண்டு 2005/2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளும் மாணவர்கள் இப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் பட்டப்படிப்புகள் பீடத்தில் சமர்ப்பிக்குமாறு பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த ஆண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கையில் சித்தியடையத் தவறிய பகுதிநேர, முழுநேர மாணவர்களையும் குறித்த திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (203)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கனகரத்தினம் பரமநாதன்**

மலர்வு
25*01*1973

உதிர்வு
29*09*2006

திதி: ஸப்தமி 18.10.2007

"ஆண்டவன் அழைத்து ஓராண்டு
ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றும் என் மனதில் நிலைத்திருக்கும்"

114A. கோயில் வீதி,
நல்லூர். (66979)

**ப.கலாமதி**
*(மனைவி)*.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

925 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கும்பம்

10 22 33 48

16-10-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4362639 - 4378155

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 336,716 | 10/- | 3,367,160/- |
| 2 இலக்கங்கள் | 30,892 | 20/- | 617,840/- |
| 1 இல. + லக்கினம் | 30,694 | 30/- | 920,820/- |
| 2 இல. + லக்கினம் | 2,819 | 100/- | 281,900/- |
| 3 இலக்கங்கள் | 830 | 500/- | 415,000/- |
| 3 இல. + லக்கினம் | 69 | 5,000/- | 345,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,147,720/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 402,028 | | 8,171,220/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5252930 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 ஒக்டோபர் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரெலியா | 4367937-3-73 |
| இரத்தினபுரி | 4366579-3-68 |
| கொழும்பு | 4377049-3-18 |
| கேகாலை | 4365184-1-73 |
| களுத்துறை | 43652[illegible] |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



## தேவை

Computer Typing, Page Maker, Coral draw என்பவை தெரிந்த திருநெல்வேலிக்கு அண்மித்த சூழலில் வசிக்கும் பெண் ஒருவர் தேவை. மேற்படி தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்கலாம். *தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:* 137, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P. NO: 0212227661


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பொதுச்சபை
உறுப்பினர்களான
**திரு ந.ஆனந்தராசா**
**திருமதி வி.ஜெயலட்சுமி**
**திருமதி கி.வரதலட்சுமி**
ஆகியோரின் அன்புத் தந்தையான
**கந்தப்பிள்ளை நடராசா**
அவர்கள் 16.10.2007
செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு
ஆழ்ந்த கவலை அடைவதோடு
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மாசாந்தி
பெறப்பிரார்த்திக்கின்றோம்.

**உறுப்பினர்கள்,**
மாவைக்கந்தன் சிக்கன கடன் உதவும் கூட்டுறவுச் சங்கம்.
*மாவிட்டபுரம்.* (67153)

## திருத்தம்

கடந்த 15ஆம் திகதிய உதயனின் 4ஆம் பக்கத்தில் கற்பகச் சோலைக் கழகங்களால் வெளிடப்பட்ட பாராட்டி வாழ்த்துகின்றோம் விளம்பரத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனான கங்காதரன் பாலவர்ணன் என்பவருடைய பெயர் தவறுதலாகக் கங்காதரன் மாலவாணன் என்று பிரசுரமாகிவிட்டது. அதனைக் கங்காதரன் பாலவர்ணன் என்று திருத்தி வாசிக்கவும்.

## மரண அறிவித்தல்



*நாராணபிள்ளை நடராசா*

*(முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன மின் முகாரி, சிமெந்து பொது தொழிலாளர் சங்கத் தலைவர், தெல்லிப்பழை பல நோ.கூ.சங்க நெறியாளர் குழு உறுப்பினர்)*

மாவிட்டபுரம், அரசடி வீதியை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை, குமாரகோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாராணபிள்ளை நடராசா அவர்கள் 16.10.2007 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராணபிள்ளை- கண்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற ஆறுமுகம்- முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் சகுந்தலாவின் பிரியமுள்ள கணவரும் கருணாகரன் (ஆனந்தன்- சிட்னி), குமுதினி (கனடா), சுதாகரன் (U.K), நந்தினி (மலேசியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கயல்விழி (சிட்னி), கோபாலகிருஷ்ணன் (க்னடா), விஜயலட்சுமி (U.K) ஆகியோரின் பாசமிகு மாமனும் நாகேஸ்வரி (மலேசியா), பரமேஸ்வரி (U.K) காலஞ்சென்ற நாகராசா (முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்), நவரத்தினம் (முன்னாள் மக்கள் வங்கி பிராந்திய உதவியாளர், வன்னி), நற்குணரத்தினம் (சிட்னி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சீவரத்தினம் (மலேசியா), பாலசிங்கம் (U.K), கானகலாதேவி (கொழும்பு), ஜெயந்தி (சிட்னி), கமலாதேவி (மலேசியா), மகேஸ்வரி (சிங்கப்பூர்), இராமச்சந்திரன் (கன்டா) காலஞ்சென்றவர்களான சரஸ்வதி (கொக்குவில்), இராமகிருஷ்ண (மலேசியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கற்பகன், சரவணன், கண்மணி, பிரசன்னா, அபிராமி, அட்சயா, லக்சயா ஆகியோரின் பிரியமான பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்கிசை மஹிந்த மலர்சாலையில் நடைபெற்று, தகனக்கிரியைகள் பிற்பகல் 4 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

32 1/1, 32 nd LANE,
WELLAWATTA.
T.P.: 2552823,
07790 50304. (சி/54022)

*தகவல்:*
மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சர் டக்ளஸின் சிபார்சை ஜனாதிபதி அங்கீகரித்தார்

# வெளிமாவட்ட அரச ஊழியர்கள் குடாநாட்டில் பணிபுவதற்கு அனுமதி

## இங்கு தங்கிய காலத்திற்குச் சம்பளமும் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 18

கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட வெளி மாவட்டங்களில் பணியாற்றி கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், கல்வித்துறை சார்ந்தோரை இங்குள்ள திணைக்களங்களில் தற்காலிகமாகப் பணியில் இணைத்துக்கொள்ள ஜனாதிபதியால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் தொடக்கம் பணிக்குச் சமுகமளிக்காதிருந்த காலப்பகுதியை முழு ஊதியத்துடனான விசேட விடுமுறைக் காலமாக அங்கீகரிக்கவும் ஜனாதிபதியால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் குறித்து சமூக சேவைகள் அமைச்சர் டக்களஸ் தேவானந்தா சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கே ஜனாதிபதி மஹிந்த அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

அமைச்சர் சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரத்தின் முழுமையான விவரம் வருமாறு:-

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் யாழ். குடாநாட்டின் மீது புலிகள் வலிந்து மேற்கொண்ட தாக்குதல்களினாலும், அதனைத்தொடர்ந்து ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டதாலும், விடுவிக்கப்படாத பகுதிகளில் பணியாற்றிவந்த அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்த பணியாளர்கள் இடம்பெயர்ந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் தற்போது நிற்கதிக்குள்ளாகியுள்ளனர். யுத்த சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் சூழ்நிலை இல்லாத நிலையில் இவர்கள் கடந்த ஒரு வருடமாக தமக்குரிய திணைக்களங்களில் தமது வரவுகளைப் பதிவுசெய்து வருகின்றனர்.

இவர்கள் பல முறையீடுகளை பல்வேறு அதிகாரிகளிடம் முன்வைத்து தம்மை யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றித் தருமாறு கேட்டும் பயனேதும் கிட்டவில்லை. இவர்களுக்கான ஊதியங்கள் இவர்கள் பணியாற்றும் திணைக்களங்களால் வழ்ங்கப்படவில்லை. ஊதியங்கள் வழங்கப்படாத நிலையில், இவர்களின் குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தில் வாழ்க்கை நடத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களின் இடமாற்றங்கள், ஊதியக் கொடுப்பனவுகள் தொடர்பில் விடுக்கப்பட்ட பல்வேறு வேண்டுகோள்கள் அதிகாரிகளால் உரியபடி கவனத்தில் கொள்ளப்படவில்லை. இவ்வூழியர்கள் பற்றிய விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

எனவே, எனது சிபார்சுகளுடன் பின்வரும் விடயங்களுக்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தைக் கோருகின்றேன்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் விடுவிக்கப்படாத பகுதிகளிலும் பணியாற்றியவர்களும், 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் தொடக்கம் நிர்க்கதிக்குள்ளாகி யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பவர்களான அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், கல்வித்துறைப் பணிசார்ந்தோர் ஆகியோரை யாழ்ப்பாணத்திலுள்ள உரிய திணைக்களங்களில் தற்காலிகமாகப் பணியில் இணைத்துக் கொள்ளுதல்.

2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் தொடக்கம் அவர்கள் பணிக்குச் சமுகமளிக்காதிருந்த காலப்பகுதியை முழு ஊதியத்துடனான விசேட விடுப்புக் காலமாக அங்கீகரித்தல்.

மேற்படி தீர்மானங்களுக்கேற்ப, உரிய திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு செயலாற்றுமாறு யாழ். மாவட்ட அரச அதிபருக்கு பணிப்புரை வழங்கல் - என்பதாகும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## நவராத்திரி பூசைகள்

யாழ்ப்பாணம். ஒக். 18

இந்து கலாசார, அலுவல்கள் திணைக்களம் நடத்தும் வாணி விழா எதிர்வரும் 21ம் திகதி நல்லூர் நாவலர் மண்ட பத்தில் காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது

வயலின், வாய்ப்பாட்டு, மிருதங்கம் முதலிய கலை வகுப்புக்களின் ஆரம்ப நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (203-79)

* * *

யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக ஊழியர்கள் நடத்தும் நவராத்திரிவிழா நாளை வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-51)

* * *

இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தின் வாணி விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன அதிபர் த.வரதராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

* * *

யாழ். பரியோவான் கல்லூரி இந்து மன்றம் நடத்தும் வாணி விழாவும் 'ஞானஒளி' சஞ்சிகை வெளியீடும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்து மன்றத் தலைவர் ச.கார்த்திக் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும் கோப்பாய் தெற்கு றோ.க.பாடசாலை அதிபருமான ச.லலீசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைப்பார். (203-72)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம். ஒக். 18

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் செல்வி யோகேந்திராதேவி கந்தசாமியின் நினைவுகூரல் நிகழ்வும் ''பண்மகள்'' சஞ்சிகை வெளியீடும் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

அதிபர் திருமதி கி.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரசிவமும் அவரின் பாரியாரும் கலந்துகொள்வர். (203)

* * *

யாழ்ப்பாணம்.ஒக்.18

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின்செஞ்சிலுவை தொடர்பான பரப்புரைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. அப்பரப்புரையில் தரம் 8 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பரப்புரைக் கூட்டத்தில் யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், பரப்புரை உத்தியோகத்தர் இ.மயில்வாகனம் ஆகியோர் கலந்துகொண்டு பரப்புரை நிகழ்த்துவர். (203)

* * *

வடக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களத்தால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட அடிப்படை கட்டுமான தொழில்நுட்ப சான்றிதழ் பயிற்சி நெறியில் கலந்துகொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்திலே நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் தலைமையிலே நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த அனைவரும் தவறாது கலந்து தமது சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (203-228-95)

* * *

வேலணை பிரதேச சபையின் உள்ளுராட்சி வார விழா நாளை வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு வங்களாவடி ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

பிரதேச சபைச் செயலாளர் தலைமையில் இடம்பெறும் விழாவில் யாழ். உள்ளுராட்சித் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் வி.பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203-95)

* * *

யாழ்ப்பாணம்.ஒக்.18

தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரிக் கிளையில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.28

இணுவில் அண்ணா சனசமூக நிலையம் இணுவில் கிராம மக்களிடையே இன்று வியாழக்கிழமை நிலைய மைதானத்தில் இல்ல மெய்வன்மைப் போட்டிகளை நடத்தவுள்ளது. (203)

## தென்மராட்சியில் புலமைப் பரிசிலில் சித்திபெற்ற மாணவர்களுக்கு நிதியம்

யாழ்ப்பாணம். ஒக். 18

தென்மராட்சி வலயப் பாடசாலைகளிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கென புலமைப் பரிசில் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நிதியத்தை மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தைச் சேர்ந்தவரும் சாவகச்சேரி திருக்கணித நிலைய இயக்குநருமான கா.சிவஞானசுந்தரம் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பலர் இந்த நிதியத்துக்கு நிதி யுதவி வழங்கினர். (202-131)

## புலிகளுக்கு ஆயுதம் கடத்தல் எனக் கூறி

# விடுதலைச் சிறுத்தைகளுக்கு எதிராக இந்திய உளவுத்துறை சதித் திட்டம்!

## அதன் பொதுச்செயலாளர் திருமாவளவன் சீற்றம்



சென்னை, ஒக். 18

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கடத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் கைதாகி விடுவிக்கப்பட்ட சம்பவம் இந்திய உளவுத்துறையின் நன்கு திட்டமிடப்பட்ட சதி எனக் குற்றஞ் சுமத்தியுள்ளார் அமைப்பின் பொதுச் செயலர் திருமாவளவன்.

எவ்வாறெனினும் விடுதலைப் புலிகளுக்கான தமது தார்மீக ஆதரவு தொடரும் எனக் குறிப்பிட்டிருக்கும் திருமாவளவன், தார்மீக ஆதரவைத் தவிர எந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளிலும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஈடுபடாது எனத் தெரிவித்துள்ளார்.


சென்னையில் வைத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்த திருமாவளவன் இது தொடர்பாக மேலும் தெரிவித்தாவது:-

''விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் விடுதலைச் சிறுத்தைக் கட்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக செய்திகள் வெளியாகி கட்சியின் செய்தி வெளியீட்டாளர் வன்னி அரசு கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். விடுதலைச் சிறுத்தைக் கட்சியின் அரசியல் நடவடிக்கையை முடக்குவதற்கும் நெருக்கடியைக் கொடுப்பதற்கும் மத்திய உளவுத்துறை இதுபோன்ற தவறான தகவல்களைத் தருகிறார்கள் என்று நாம் சந்தேகப்படுகிறோம்.

விடுதலைப் புலிகளுக்குத் தார்மீக ஆதரவைத் தவிர வேறு எந்த சட்டவிரோத நடவடிக்கையிலும் விடுதலைச் சிறுத்தைக் கட்சி ஈடுபட்டது கிடையாது. வன்னி அரசு பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு உதவி செய்வதற்காக நோர்வேயிலுள்ள நண்பர் மூலம் உதவி கேட்டிருக்கிறார். படகுகளுக்கான உதிரிப்பாகங்களை அவர் அனுப்பியிருக்கிறார். அந்தப் பார்சலை இதுவரை பிரித்து பத்திரிகையாளர்களிடம் காட்டியதில்லை. கடத்தல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கையில் வன்னி அரசு ஈடுபடுபவராக இருந்தால் அவர் பெயரை மாற்றிச் சொல்லியிருக்கலாம். முகவரியை மாற்றியிருக்க முடியும். அவர் அவ்வாறு செய்யவில்லை. அவரது இன்னொரு பெயரான 'ஜெயராஜ்' என்றுதான் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் நெருங்கிவரும் இந்நேரத்தில் மத்திய உளவுத் துறையிலுள்ள சில மதவாத அதிகாரிகள் திட்டமிட்டு விடுதலைச் சிறுத்தைக் கட்சியை முடக்கப்பார்க்கிறார்கள் - என்றார்.

## மருதனார் மடத்தில என்னவாம்...




"மச்சி கலர்புல்லா இருக்குமாம்! கல்லும் கதைசொல்லுமாமே!"

"ஓமோம் யாழ்ப்பாணத்தில இப்பிடி ஒருக்காலும் நடந்ததில்லையாம்"

"சரி சரி 20ஆம் திகதிவரை..."

## தெய்வசக்தி அணுவிலும் நுண்ணியது



ஒவ்வொரு அணுவிலும் ஒவ்வொரு உயிர். அணுவிலும் தெய்வ தத்துவம் நிறைந்துள்ளது. பொருள் அணுக்களின் கட்டமைப்பு ஒவ்வொன்றிலும் அணுக்களால் நிறைந்துள்ளது. வேதாந்தம், அனைத்தும் ஆத்மாவால் நிறைந்துள்ளது என்று கூறுகிறது. ஆத்மா இல்லாத இடமில்லை. அணுக்கள் தெய்வீக சக்தியைப் பெற்றவை. தெய்வசக்தி அணுவிலும் நுண்ணியது. அண்டத்திலும் பெரியது. ஒன்றை நாம் ஏற்றுக் கொண்டு மற்றதை மறக்கலாகாது. ஒவ்வொரு அணுவில் உயிரணுவிலும் தெய்வீகம் உறைந்துள்ளது. மனிதன் கண்ணால் காண்பவற்றை மட்டும் ஏற்றுக்கொண்டு மற்ற வற்றை நம்ப மறுக்கிறான். இது தவறு. மறைந்துள்ளவற்றில் உள்ள தத்துவத்தை அறிய மறுக்கின்றோம். ஐந்தடி உயரமுள்ள ஒருவரைக் காண்கிறீர்கள். அவர் மாநிறமானவர். அவரது தலை வழுக்கையாக உள்ளது. ஸ்தூலவடிவமே உண்மையென்று நினைக்கிறீர்கள். அவரிடம் பல பண்புகள் மறைந்துள்ளன. அவரிடம் தயை உள்ளது. அவரிடம் தெய்வீக பாவனையுள்ளது. இவற்றை நீங்கள் கவனிப்பது இல்லை, அதனால் இல்லை என்று கூற முடியுமா?

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்



ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்த எமது மகள்

**செல்வி சிறீதரன் ஷாலினி**

அவர்களைப் பாராட்டுவதுடன் அல்லும் பகலும் அயராதுழைத்த யசோதா கல்வி நிலைய ஆசிரியை யோ.தேவமதி அவர்களை மனமார்ந்த நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

பெற்றோர்,
அளவெட்டி மேற்கு.
(66945)



## கேன் புற்றுநோயாளர் காப்பகம்
**சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்**

இக்காப்பகத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்காக சேவை மனப்பான்மையும் தகுதியும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவிகள்**
- எழுதுவினைஞர் (Clerk)
- தாதி உதவியாளர் (Nurse Aide)
- உதவியாளர்கள் (Helpers)
- சாரதி (Driver)

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதி 31.10.2007 ஆகும். விண்ணப்பம் அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
தலைவர்,
கேன் புற்றுநோயாளர் காப்பகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்.


ஒவ்வொரு பதவிக்கும் தகுதி உடைய, தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும் மீண்டும் மறுவிண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பப் பத்திரங்களை கேன் நிறுவன காரியாலயத்தில் 2007 ஒக்டோபர் 22 முதல் 31 வரை காலை 9.00 - 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
கேன் புற்றுநோயாளர் காப்பகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்.
(66966)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
10 ★ 04 ★ 1979

உதிர்வு
29 ★ 10 ★ 2006

**அமரர் செல்லத்துரை சுதர்சன்**

பண்பின் சிகரமாய் வாழ்ந்து
பாரிற்கு உதாரணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
யாவருக்கும் இனியவராய் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டானதோ!

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.
(66949)
குடும்பத்தினர்,
வவுனியா.



## 31ஆம் நாள் நினைவுப் பூக்கள்



**அமரர் சத்தியபாமா சொர்க்கலிங்கம்**

அறுபத்தைந்து ஆண்டுகள்
பூவுலகில் வாழ்ந்து
முப்பத்தொன்பதாண்டுகள்
இல்வாழ்வில் இணைந்து
இன்பமாய் மகளையும் மகனையும்
வளர்த்து இலண்டனிலும் சுவிசிலும்
இன்பமாய் இல்லறமும் நல்லறமும் காட்டி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
தெய்வத்துள் சென்றனையோ!

18.09.2007 அன்று அமரத்துவம் அடைந்த எமது இல்லத் தலைவியின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று (18.10.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோவில்கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி. (சி.539976)

பொ.சொர்க்கலிங்கம் (கணவர்),
திருமதி கௌரி கெங்கநாதன் (மகள் - சுவிஸ்),
சொ.யசோதரன் (மகன்-லண்டன்).


## பல்கலை. மாணவர்கள் கள ஆய்வுச் சுற்றுலா

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி அபிவிருத்தி மாணவர்கள் களஆய்வுக்கான சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இச் சுற்றுலா பேராசிரியர் வி.பி.சிவநாதன் தலைமையில் இடம்பெறும்.

மேற்படி சுற்றுலா நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி பொ.பாலசுந்தரம் பிள்ளை, பொருளியல் சிரேஷ்ட விரிவுரையாளர் என்.பேரின்பநாதன், கலாநிதி கா.குகபாலன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

(202 - 95)


### விற்பனைக்கு

21" Colour TV, P4 Computer, Scooty pep, வீட்டுத் தளபாடப் பொருள்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 122/11, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. 077 4038698
(67152)

### சேவை

55,000 அமெரிக்க Green Card லொத்தர் விண்ணப்ப விவரங்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை 14.10.2007 உதயனைப் பார்க்கவும்.

**Penguin Book Shop,**
B2/F23, Bloemendhal Flats, Colombo -13
(சி/53989) T.P.: 2438367, 077 5438898

### வீட்டுப் பணிப்பெண் தேவை

நல்லூர் கோயிலை அண்டிய பகுதியில் வசிக்கும் குடும்பத்திற்குப் பிள்ளைகள் பராமரிப்பு மற்றும் வீட்டுவேலைகளை தங்கி நின்று செய்வதற்குப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். ஆர்வமுடையவர்கள் விண்ணப்பங்களை சுயவிலாசம் மற்றும் தொலைபேசி எண் இருப்பின் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 3016,
உதயன் மே/பா,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(67151)

### கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 19.10.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.
- ★றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- ★ரவி, சாவகச்சேரி
- ★றாஜ் ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, நெல்லியடி
- ★ஸ்ரீ வித்ஜா ரேடர்ஸ், அச்சுவேலி
- ★மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- ★திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி
- ★சிவம் ஸ்ரோர்ஸ், ஏழாலை

T.P.: 222 3529, 222 2867.
(66063)



## 43ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 20 ★ 07 ★ 1984



உதிர்வு 06 ★ 09 ★ 2007

**செல்வன் இராசேந்திரன் சதீஸ்**

மத கரி அன்ன மணி நடை
மரணத்திலும், சிரித்திடும் காட்சி
மாற்றாரும் கண்டஞ்சிடும் நேர்மை - இறப்பிலும்
ஏளனம் செய்யும் பார்வை...
திருவாசி சுமந்து ஒரு பாதி உயர்ந்த தோள் - நல்லை
திருவீதி உலாக்கண்டு உருண்டெடுத்து
ஒரு தனி வழி பார்த்து, நீ வந்த பொழுது
இப்பெரும் துன்பம் எப்படி நடந்தது....?
திரும்பாத பயணமும் நிறைவேறாத ஆசையுமாய்...
சேதி சொல்லாது போனவனே...
வழி மேல் விழி வைத்துப் பார்த்திருக்கின்றோம்
உன் வரவுக்காய்....

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்: உறவினர், நண்பர்கள், பெற்றோர், சகோதரிகள்.
"சதீஸ்... துயரங்களும் சோகங்களும் தூர இருப்பதில்லை"

நந்தாவில் அம்மன் கோயில், கொக்குவில். தகவல்: பேரின்பநாயகம்.
(66999)



## Calling for Tender Teaching Hospital, Jaffna Renovation NTS Student Hostel Toilets

1. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed Tender for Renovation NTS Student Hostel Toilets, up to 10.00 a.m. on 31/10/2007. Tender form may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 24.10.2007 on payment on non refundable deposit of Rs: 1,500/=.
2. Tender will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenders or their authorized representative are requested to be present at the opening Tenders.
3. Tender Forms are issued only contractors having valid registration in grade - M9 - and above in the Field of building contractions and other institute of construction Training and Development (ICT AD) criteria and valid membership of National Construction of contractors association of Sri Lanka. (NCCASL)
4. Sealed Tender may be despatched either by registered post or hand delivered to Director Teaching Hospital, Jaffna or deposited in the Tender box at Teaching Hospital Jaffna on or before 10 a.m. on 31/10/2007.
5. Tender document may be inspected free of charge at the Resident Engineer's Office CECB TH, Jaffna.
6. For further details please contact Hospital Secretary TH, Jaffna.

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital, Jaffna.*
(C54017)



New Batch! New Batch! New Batch! New Batch!

## விஜயதசமி அன்று பதிவு செய்பவர்களுக்கு

Offer! Offer! Offer! Offer!

O/L தகைமையுடன் நீங்களும் கணினிப் Degree பட்டதாரியாகலாம் இரண்டு வருடங்களில்

Certificates awarded by
OR Trinity University (USA Spain)
Institution of British Engineers (UK)

சர்வதேச அங்கீகாரமுடைய மூன்று பல்கலைக்கழகங்களுடன் எம்மூடாக இணையும் அரிய வாய்ப்பு

அலுவலர்களுக்காக சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தனியானபிரிவு

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் Higher Diploma கற்கைநெறியை தொடர்ந்து பயில முடியாதவர்கள் எம்முடன் இணைந்து B. Sc. யை பயில முடியும்

எமது மண்ணிலேயே ஆங்கில மூலமான முதலாவது Degree

New Batch!

Diploma in Hardware Eng.
சகல Diploma வகுப்புகளும்

21-10-07 ஆரம்பம்

பதிவுக்கட்டணம் 100% இலவசம்

Prof. A. Sanmugadas, Administrative Advisor.

சங்கானையில்
NORTH LANKA IIT
The Srilankan center of Trinity University USA
Main Street, Chankanai. 060 2214305

யாழ்ப்பாணத்தில்
NEW COLLEGE OF HIGHER STUDIES
No 95, Ariyakulam Junction, Jaffna.
060 2214305
Specially for workers .............


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

# யாலப் பிரதேசத் தாக்குதல் வெளிப்படுத்தும் உண்மை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டைப் பிரதேசத்துக்கு அருகில் உள்ள மொனராகலையில் - முழு தென்னிலங்கைப் பகுதியில் - அமைந்துள்ள யால வன விலங்குச் சரணாலயத்துக்குள் ஊடுருவி கடந்த ஞாயிறு மாலை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதல் பல்வேறு பரிமாணங்களில் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்திருக்கின்றது.

இலங்கையின் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர் தாயகப் பிரதேசத்தில் தற்போது இடம்பெற்றுவரும் மிக மோசமான யுத்தத்தின் தீவிரத்தோடு ஒப்பிடுகையில் யால தல்கஸ்மங்கடவில் இடம்பெற்ற தாக்குதலும் அங்கு இடம்பெற்ற மோதலும் அதனால் நேர்ந்த நேரடி இழப்புகளும் அப்படி ஒன்றும் மோசமானவையல்ல.

ஒரு மினி முகாமே தாக்கப்பட்டிருக்கின்றது. அங்கு ஆறு, ஏழு படையினர் வரை உயிரிழந்திருக்கின்றார்கள். மேலும் சிலர் காணாமல் போயிருக் கலாம் எனக் கருதப்படுகின்றது. அந்த மினி முகாமை ஒருசில மணி நேரம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்று கூறப்படும் விடு தலைப் புலிகள், அதற்குத் தீயிட்டு எரித்த பின்னர் அங்கிருந்து வெளி யேறிவிட்டனர்.

ஆகவே, ஒப்பீட்டளவில் நோக்கினால் அண்மைக்காலத்தில் யுத்த முனையில் இடம்பெற்றுவரும் இழப்புகள், பாதிப்புகள், சேதங்களுடன், யாலவில் இடம்பெற்றவை அவ்வளவு குறிப்பிடத்தக்க பெரிய விடயமல்ல.

ஆனால், இந்தத் தாக்குதல் இடம்பெற்ற இடம், நேரம் மற்றும் அதன் பின்விளைவுகள் ஆகியவற்றை ஆழமாக நோக்கினால் அதற்குள் புதைந்து கிடக்கும் உள்ளார்ந்த அர்த்தங்களை ஓரளவு புரிந்து கொள்ள இயலும்.

கிழக்கிலிருந்து விடுதலைப் புலிகளை முற்றாக விரட்டியடித்து விட்டாகிவிட்டது என மார்தட்டி, விழாக் கொண்டாடியது கொழும்பு அரசு. கிழக்கில் இனிப் புலிகள் மீளத் தலையெடுக்கவே முடியாது என் றும் அரசு பிரகடனப்படுத்தியது.

ஆனால் கிழக்கில் நிலைமை அதுவல்ல என்பதை அவ்வப்போது அங்கு தாம் மேற்கொள்ளும் கரந்தடித் தாக்குதல்கள் மூலம் புலிகள் நினைவூட்டி, உணர்த்தி வந்தனர்.

இப்போது கிழக்கையும் தாண்டி, தென்கிழக்குப் பகுதியில் உள்ள - சுமார் அறுபது துருப்புகளைக் கொண்ட - ஒரு மினி முகாமையே அதிர டித் தாக்குதல் மூலம் கைப்பற்றும் அளவுக்கு கிழக்கு ஊடான ஊடு ருவலையும் தமது துருப்புகளின் நகர்வையும் செயலில் நிரூபித்துக் காட்டியிருக்கின்றார்கள் அவர்கள்.

கதிர்காமத்திலிருந்து வடக்கே சுமார் நாற்பது கிலோமீற்றர் தொலைவில் - அம்பாறை மாவட்டம், பாணமைக்குத் தெற்கே - முற்றும் முழுதாகத் தென்னிலங்கை சிங்களத் தாயகத்தின் மத்தியில் அமைந்திருக்கின்றது இந்த யால தல்கஸ்மங்கடப் பிரதேசம். தாங்கள் நினைத்தால் இலங் கையின் எந்தப் பிரதேசத்துக்குள்ளும் ஊடுருவித் தாக்க முடியும் என்பதை இத்தாக்குதல் மூலம் புலிகள் மீண்டும் ஒரு தடவை கொழும்புக்கு அழுத்தம் திருத்தமாக உணர்த்தியி ருக்கின்றார்கள்.

யால வனவிலங்குச் சரணாலயம் சுமார் 368 சதுர மைல் பரப்பளவில் பரந்து, விரிந்து அமைந்திருந்தாலும் அதன் ஐந்து பிரதான வலயங்களில் மூன்று ஏற்கனவே தீவிரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்தன. எஞ்சியிருந்த இரு வலயங்களில் ஒன்றிலேயே ஞாயிறன்று தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது.

இத் தாக்குதல் இடம்பெற்ற இடத்துக்கு அடுத்ததாக முக்கியத்துவம் பெறுவது தாக்குதல் இடம்பெற்ற நேரமாகும்.

பொதுவாகப் புலிகளின் முதுகெலும்பை முறித்து விட்டதாக கொழும்பு அரசும் அதன் படைகளும் முழங்கி வருகையில், அந்த முழக்கத்துக்கு ஆப்பு வைக்கும் வகையில், இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருந்தாலும் கூட, அதைவிட முக்கியமான நேரப் பொருத்தமும் இதில் சம் பந்தப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

கடந்த ஐந்து வாரங்களாக வருடாந்த விடுமுறைக்காக யால சரணாலயம் மூடப்பட்டிருந்தது. உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கான சுற்றுலாப் பருவகாலம் ஆரம்பமாகவிருந்ததை ஒட்டி, சரணாலயமும் கடந்த திங்களன்று திறக்கப்படவிருந்தது. அதற்கு முதல் நாளே இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. சரணாலயம் மூடப்பட்டிருந்த சமயமாதலால் அவ்வேளையில் அங்கு சுற்றுலாப் பயணிகள் எவரும் இருக்கவில்லை. தப்பித்தவறி ஒருநாள் பிந்தி இத்தாக்குதல் நடந்திருக்குமானால் அப்பாவி உல்லாசப் பயணிகளும் இதில் சிக்கியிருக்கக்கூடிய ஆபத்து நேர்ந்திருக்கும்.

ஆகவே, உல்லாசப் பயணிகளுக்கும் ஏனைய அப்பாவிப் பொது மக்களுக்கும் சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, சரணாலயம் மூடப்பட்டிருந்த சமயத்திலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. அதேவேளை யால சரணாலயம் இந்த உல்லாசப் பயணிகளின் வருகையை ஒட்டியகாலத்தில்செயற்படாமல்இருப்பதைஉறுதிப்படுத்துவதற்காக, அது அடுத்தநாள் பொதுமக்கள் நடமாட்டத்துக்காகத் திறந்துவிடப்படவிருக்கையில் அதன் மீது அதிரடிப் பாய்ச்சல் நடத்தப்பட்டிருக்கின்றது. இந்த தாக்குதல் நாட்டின் பிரதான தேசிய வருமானங்களில் ஒன்றான உல்லாசப் பயணத்துறை மீது மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியது.

இலங்கைக்குத் தமது நாட்டின் பிரஜைகள் உல்லாசப் பயணிகளாகவோ, வேறு மார்க்கங்களுக்காகவோ விஜயம் செய்வதற்கு எதிரான சிபார்சு எச்சரிக்கைகளை வெளியிட்டு வந்த மேற்குலக நாடுகள், இப்போதுதான் அந்தக் கருத்தியல் நிலைப்பாட்டை மீளப் பெற்றுக் கொண்டு, தமது பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்வதைத் தடுக்கும் எச்சரிப்பு அறிக்கையை வாபஸ் பெறத் தொடங்கியிருக்கின்றன.

இந்தச் சமயத்தில், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் விரும்பி, பெரும் எண்ணிக்கையில் வரும் முக்கிய வனவிலங்குச் சரணாலயத்துக்குள் புகுந்து இந்த அதிரடிப் பாய்ச்சலைப் புலிகள் நடத்தியிருப்பது, இலங்கையின் உல்லாசப் பயணத்துறைக்குக் கிடைத்த பேரிடியும், பேரடியும் ஆகும். இத்தகைய தாக்குதல்கள், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் இலங்கை வருகையைக் குறைக்கச்செய்து அத்துறையையே நிரந்தர சீக்காளியாகப் படுக்கையில் தள்ளிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் யாலவில் இடம்பெற்ற புலிகளின் தாக்குதல், இலங்கையின் பொருளாதாரத் துறையை நேரடியாக இலக்கு வைத்த ஒரு நடவடிக்கை எனத் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

தத்தமது நாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருவது அப்படி ஒன்றும் ஆபத்தான விடயமல்ல என்று மேற்குலக இராஜதந்திரிகளும், அந்தந்த நாட்டு அரசுகளும் அறிவித்து, தமது நாட்டுப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்வதை ஊக்குவித்தும் வந்த வேளையில், அந்த முயற்சிக்கு - இலங்கைக்கு மேற்குலக உல்லாசப் பயணிகள் வருவதைத் தடுக்கும் வகையில் - ஆப்பு வைக்கும் செய லாக அமைந்திருக்கின்றது யாலத் தாக்குதல்.

"நாங்கள் நிலைவரத்தை ஊன்றி - தீவிரமாக - அவதானித்து, கண்காணித்து வருகின்றோம். மீண்டும் எமது நாட்டுப் பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு எதிராக பயண எச்சரிக்கையை வெளியிடுவதா என்பது குறித்துப் பரிசீலித்து வருகிறோம்." - என மேற்குலக இராஜதந்திரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

"தமிழர் தாயகத்தின் மீது தனது போரியல் கொலை வெறித் தீவிரத்தை கொழும்பு அரசு விஸ்தரித்து, முனைப்புப்படுத்துமானால், பதில டியாக நாட்டின் எந்தப் பகுதிமீதும் தாக்குதல் நடத்துவோம். இலங்கை யின் பொருளாதார இலக்குகள் மீதும் கண் வைப்போம்!" - என சில மாதங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதன் தொடர்ச்சியே தல்கஸ்மங்கடவில் ஞாயிறன்று அதிரடிப் பாய்ச்சலாக வெளிப்பட்டிருக்கின்றது எனலாம்.

# பயங்கரவாத ஒழிப்பு மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஒக். 18

பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான சர்வதேச மாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகின்றது. வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இம்மாநாட்டில் அவுஸ்திரேலியா, ஒஸ்ரியா, பங்களாதேஷ், பெல்ஜியம், சீனா, செகஸ்லோவோக்கியா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, இஸ்ரேல், மலேசியா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், ரஷ்யா, சவூதி அரேபியா, வியட்னாம், அமெரிக்கா உட்பட 19 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இதனை நேற்றுத் தெரிவித்தார்.

"பயங்கரவாதம், ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசுகளுக்கு ஒரு சவால்" என்ற தலைப்பிலேயே இந்த சர்வதேச மாநாடு நடைபெறவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம ஊடகங்களுக்கு விளக்கம் அளிக்கும்போது மேலும் கூறியவை வருமாறு:-

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு ஒரு சவால் எனும் கருப்பொருளில் பயங்கரவாதத்தைஎதிர்கொள்வதற்கானதொரு சர்வதேச மகாநாடு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நாளை ஒக்டோபர் 18ஆம் திகதி (இன்று) இடம் பெறவுள்ளது. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் லக்ஷமன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும் உபாய ஆய்வுகளுக்குமான நிலையத்தினால் இந்நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நிலையத்தின் பிரான்ஸ் பிரச்சினைகளுக்கான கற்கையின் பணிப்பாளராகச் சேவையாற்றிய ஜெரட் சலியன்ட் பிரதான உரையை வழங்குவார். இந்நிகழ்வின் ஆரம்ப வைபவத்தில் பயங்கரவாத விவகாரங்களைப் பற்றி பரிசீலனை செய்யும் பிரபல பிரான்ஸ் நீதிபதி ஜீன் லூயிஸ் பேகேரியும் கலந்து கொள்ளவுள்ளார்.

மூன்று தினங்களாக இடம் பெறவுள்ள இம்மாநாட்டில் வெவ்வேறு தலைப்புகளில் பல தொடர் கூட்டங்களும் இடம்பெறவுள்ளன. பயங்கரவாதம் சம்பந்தமாக சர்வதேச மற்றும் பிராந்தியங்களின் பதில், உள்நாட்டில் பயங்கரவாதத்தின் பரிமாணம், பயங்கரவாதிகளின் நிதி திரட்டல், சமூக பொருளாதார ரீதியிலான பயங்கரவாதத்தின் செலவு மற்றும் ஊடகங்கள் மற்றும் சிவில் சமுகத்தின் பங்களிப்பு ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளின் எல்லைக்குள் போராளிகளை மாற்றுவழிக்குக் கொண்டு வரக்கூடிய சாத்தியக் கூறுகள் போன்ற விடயங்கள் இதில் கலந்தாலோசிக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் அனுபவம் மற்றும் பிரபலம் மிக்க பேச்சாளர்கள் பலர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர் - என்றார் (சி)

# மின் இணைப்புக்குத் தேவையான கம்பிகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஒக். 18

பிரதான மின்வழங்கல் கம்பிகள் இல்லாததால் மின் இணைப்பு வழங்கப்படாத பலருக்கு விரைவில் மின்விநியோகம் வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

இலங்கை மின்சார சபை வட பிராந்திய அலுவலகத்திற்கு பெருமளவு பிரதான மின்வழங்கல் கம்பிகள் (சேவிஸ். வயர்) கப்பல் மூலம் தருவிக்கப்பட்டுள்ளதால் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட கம்பிகள் அந்தந்த மின்பாவனையாளர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின் இணைப்பு உபகரணங்கள் இல்லாததால் மின்னிணைப்புக்கு விண்ணப்பித்தவர்கள் மின்சார சபை அலுவலகங்களுக்கு தினமும் அலைவது குறித்து உதயனில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-207)

# யாழ். மாநகர நலன்புரி நிலையங்களில் இன்னமும் 452 பேர் தங்கியுள்ளனர்

குருநகர், ஒக். 18

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் சுமார் 125 குடும்பங்களைச் சேர்ந்த 452 பேர் தங்கியுள்ளனர். யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். மரியதாசன் இத்தகவலைத் தெரிவித்தார்.

நாவாந்துறை சென். நீக்கலஸ் றோ.க. பாடசாலை நலன்புரி நிலையத்தில் 77 குடும்பங்களைச் சேர்ந்த 305 உறுப்பினர்களும் -

யாழ். கதீஜா முஸ்லிம் பாடசாலை நலன்புரி நிலையத்தில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 67 உறுப்பினர்களும் -

யாழ். அடைக்கலமாதா றோ.க. பாடசாலை நலன்புரி நிலையத்தில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 80 உறுப்பினர்களும் தங்கியுள்ளார்கள்.

இவர்கள் அல்லைப்பிட்டி, மண்டைதீவு பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களாவர். (51)

# மினிபஸ் விபத்தில் மாணவி காயம்

யாழ்ப்பாணம், ஒக். 18

மினிபஸ் ஒன்று மின்கம்பத்துடன் மோதியதில் பாடசாலை மாணவி ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 7.45 மணியளவில் மானிப்பாய் - யாழ். வீதியில் ஆறுகால்மடம் கோம்பையன்மணல் மயானத்திற்குச் சமீபமாக இடம்பெற்றது.

சம்பவத்தில் ஆறுகால்மடம், மானிப்பாய் வீதியைச் சேர்ந்த வி. பத்மலோஜினி (வயது - 15) என்ற மாணவியே காயமடைந்தவர் ஆவார்.

இளவாலை - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் 788ஆம் இலக்க மினிபஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளானது. சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் மினிபஸ் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது. (அ-202-51)

# வடக்கு மாகாண சபையின் நூற்பரிசுப் போட்டி முடிவுகள்

## 28ஆம் திகதி வவுனியாவில் விருதுவிழா

யாழ்ப்பாணம், ஒக். 18

வடக்கு மாகாண சபையின் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு நடத்திய நூற்பரிசு போட்டிகளில் பரிசில் பெறுவோர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பரிசில்கள் பெற்றவர்களுக்கான விருதுகள், வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும் இலக்கிய விழாவில் வழங்கப்படும்.

பரிசில் பெறுவோர் விவரம் வருமாறு:

* உயிர்கல்வி - சமூகப் பொருண்மைகள் - அன்ரனி எட்மண்ட் நிபோட்.
* நாவல் - வாழ்க்கையின் நிறங்கள் - நீ.பி. அருளானந்தம்.
* சிறுகதை - நெஞ்சாங்கூட்டு நினைவுகள் - ஆ. இரத்தினவேலோன்.
* ஆய்வு - மலாயக் குடிபெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும் - பேராசிரியர் சமாதிலிங்கம் சத்தியசீலன்.
* நாடகம் - கொல் ஈனும் கொற்றம் - யோன்சன் ராஜ்குமார்.
* பல்துறை - கடலலைகள் கொஞ்சும் பாக்கள் - கலையார்வன் (கு. இராயப்பு).
* பல்துறை - உணவும் போசனையும் - சறோஜினி பேரானந்தம்.
* பல்துறை - உணவும் பேசனையும் - பேராசிரியர் வசந்தி அரசரெத்தினம்.

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட அடிப்படைக் கட்டுமானப் பயிற்சிநெறிகளில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும்நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஷ் கலந்துகொள்வார். (1-207)

# வாழை மரங்களை அழித்து நாசவேலை

யாழ்ப்பாணம், ஒக். 18

நீர்வேலி தெற்கு பகுதியில்உள்ள வாழைத் தோட்டங்களில் பயிரிடப்பட்ட சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்களை விஷமிகள் வெட்டி அழித்து நாசமாக்கி உள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த நாசவேலை இடம்பெற்றுள்ளது. குலைபோடும் பருவத்தில் நின்ற இந்த வாழைகளை வேண்டும் என்றே வெட்டி அழிநத்துள்ளனர் என்று தோட்ட உரிமையாளர் கவலையுடன் தெரிவித்தார்.

விஷமிகளின் இந்த நாசவேலை யால் [illegible] மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-224)

# அமைச்சரின் 'ஜீப்'பைக் கடத்திய கொள்ளையர்கள் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஒக். 18

அமைச்சர் ஒருவருக்கு சொந்தமான 'ஜீப்' ரக வாகனத்தைக் கடத்திச் சென்று கொண்டிருந்த கொள்ளைக் கோஷ்டியொன்றின் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், கொள்ளையர்கள் இருவர் பலியான சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றிருக்கின்றது.

தென்பகுதியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவருக்குச் சொந்தமான வாகனத்தையே ஐவர் அடங்கிய கொள்ளைக் கோஷ்டியொன்று துப்பாக்கிமுனையில் களுத்துறையில் வைத்து வழிமறித்து கடத்திச் சென்றது என்றும், குறித்த வாகனக் கடத்தல் இங்கிரிய பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து முறி[illegible]டது என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று விடிகாலை நடந்த இச் சம்பவத்தின்போது வீதிச்சோதனைச் சாவடியில் தரிக்காது வேகமாகச் சென்ற ஜீப் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் சுனிங்சிறீ, புத்திக என்ற இரு கொள்ளையர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மற்றும் இருவர் கைதாகினர். மற்றைய ஒருவர் தப்பித் தலைமறைவாகி விட்டார். அவரைத் தேடும் படலம் தொடர்கின்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 02 : | வெள்ளிக்கிழமை 19.10.2007 |
| திதி : அட்டமி | முன்னிரவு 09.23 |
| நட்சத்திரம் : | உத்தராடம் பின்னிரவு 02.03 |
| சுபநேரம் | : 06.02 - 07.32 |
| ராகுகாலம் | : 10.32 - 12.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட

# கருணா அணியும் புலிகளும்கூட அரசியல் கட்சியாகப் பதியலாம்

## அரசுத் தரப்பில் இருந்து அறிவிப்பு

கொழும்பு, ஒக். 18

வடமாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்காகப் பெறப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிதாக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான திருத்தச் சட்டமூலம் அடுத்தவாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அது சட்டமாக்கப்பட்டதும் கருணா அணியினர், புலிகள் உட்பட அனைவரும் தமது புதிய அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்து தேர்தலில் போட்டியிடலாம் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் இது தொடர்பாக மேலும் கூறுகையில் -

வடமாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தும் பொருட்டு பழைய வேட்பு மனுக்களை ரத்துச் செய்துவிட்டு புதிய வேட்பு மனுக்களைக் கோரும் சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

சட்டமூலம் அரசியல் யாப்புக்கு ஏற்புடையது என்று நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அடுத்தவாரம் இச்சட்டமூலம் நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். அது சட்டமாக்கப்பட்டதும் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்துகொள்ளமுடியும்.

கருணா அணியினரும் புலிகளும் கூட தமது கட்சிகளைப் பதிவுசெய்து கொள்ளலாம். அனைவரும் அரசியலுக்கு திரும்புவதையே விரும்புகிறோம், - என்றார்.(சி)

வடமராட்சியில் கொள்ளைபோன

# பொலிஸாரால் மீட்கப்பட்ட நகைகளை அடையாளம் காட்டக்கோரிக்கை

வடமராட்சியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களின்போது சூறையாடப்பட்டுத் தற்சமயம் மீட்கப்பட்டுள்ள நகைகளை அடையாளம்காட்டுமாறு பொலிஸார் அவற்றைப் பறிகொடுத்தவர்களைக் கேட்டுள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட நகைகளின் ஒரு பகுதி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸ்நிலையங்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் சமுகமளித்து கொள்ளையிடப்பட்ட தமது நகைகளை அடையாளம் காட்டுமாறு பொலிஸார் மக்களைக் கோரியுள்ளனர். (அ-1)

## ஊடகவியலாளரின் படச்சுருள் பறிப்பு

கொழும்பு, ஒக். 18

பத்தரமுல்ல - கொஸ்வத்தைச் சந்தியில் நேற்று நிகழ்ந்த இராணுவ 'கொண்டெய்னர்' விபத்துச் சம்பவம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவ அதிகாரிகளால் தமது கடமைகளைச் செய்யவிடாது தடுக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.


சம்பவத்தைப் படமெடுத்துக் கொண்டிருந்த 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார ஏட்டின் மூத்த படப்பிடிப்பாளர் பேர்டி மெண்டிஸ் என்பவர் இராணுவ அதிகாரிகளால் அச்சுறுத்தப்பட்டார்.

குறித்த படப்பிடிப்பாளரை படம் எடுக்க வேண்டாம் எனத் தடுத்த படையினர், அவரிடமிருந்த 'கமெரா'விலிருந்த படச்சுருளைப் பறித்துச் சிதைத்தனர் என அறிய முடிந்தது.

மற்றைய ஊடகங்களைச் சேர்ந்த படப்பிடிப்பாளர்களும் இவ்வாறே படையினரால் தமது கடமையைச் செய்வதிலிருந்து பலவந்தமாகத் தடுக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# இன்று நாடு திரும்புகிறார் பெனாஸிர்

## கைதாவதற்கான வாய்ப்புகள் குறைவு



கராச்சி, ஒக்.18

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான பெனாஸிர் பூட்டோ, சுமார் 9 ஆண்டுகளின் பின்னர் இன்று நாடு திரும்புகிறார். அவர் கைதாவதற்கான வாய்ப்புகள் குறைவு என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விமானம் மூலம் கராச்சி வரும் பெனாஸிரை வரவேற்க பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர்கள் பிரமாண்ட ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். அவரது வருகையை முன்னிட்டு நேற்றிரவுமுதல் கராச்சி நகரில் 3,500 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்களென உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னதாக பூட்டோ நாடு திரும்புவதற்கு வழிவகை செய்யும் அவசர சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் தீர்ப்பு வரும் வரையில் தனது பயணத்தை பூட்டோ தள்ளி வைக்கக்கூடும் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. அந்தச் செய்திகளை அடியோடு மறுத்த பெனாஸிர், தனது இன்றைய நாடு திரும்பும் நிகழ்வையும் உறுதி செய்துகொண்டார்.

பாகிஸ்தான் திரும்பினால் தன் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அரசில் இடம்பெற்றுள்ள ஜிகாத் அமைப்புகள் மிரட்டல் விடுத்துள்ளன என்றும் பெனாஸிர் பூட்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த செப்ரெம்பரில் பாகிஸ்தான் திரும்பிய மற்றொரு முன்னாள் பிரதமரான நவாஸ் ஷெரீப் சில மணி நேரங்களிலேயே சவூதி அரேபியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

ஆனால் பூட்டோவின் வருகைக் காக அவரது கட்சியினர் செய்து வரும் தடபுடல் ஏற்பாடுகளுக்கு ஜனாதிபதி முஷாரப் தரப்பிலிருந்து கெடுபிடி காட்டப்படவில்லை என்பதால் பெனாஸிர் கைதுசெய்யப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் கருத்தை ஏற்கும் விதத்தில் பாக். பிரதமர் சௌகத் அஷீஸும் தகவல் வெளியிட்டுள்ளார்.

இதற்கிடையில் பெனாஸிருக்கு பிரமாண்டமான முறையில் வரவேற்பு அளிக்க அவரது கட்சியினர் ஏற்பாடு செய்து வருகிறார்கள். ஆயிரக்கணக்காண வாகனங்களில் கட்சித் தொண்டர்களை ஏற்றி கராச்சி விமான நிலையத்தில் வந்து இறங்கும் பெனாஸிரை வரவேற்கத் திட்டமிட்டு உள்ளனர் என அறியக்கிடைக்கின்றது. நகர் முழுவதும் கட்சிக் கொடிகளும் தோரணங்களும் கட்டி நகரையே விழாக் கோலம் பூண்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

## இந்தியாவிடம் ஜனாதிபதி ஆயுத உதவி கேட்கவில்லையாம்

கொழும்பு, ஒக். 18

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிடம் ஆயுத உதவியையோ இராணுவ பாதுகாப்பையோ கேட்கவில்லை. இந்தியப் பிரதமருடனான சந்திப்பின்போது இவ்விடயம் குறித்து எதுவும் கலந்துரையாடப்படவில்லை''

-இவ்வாறு அடித்துக் கூறுகின்றார் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம.

''ஜனாதிபதி கடந்த வாரம் இந்தியாவுக்கு சென்றிருந்த போது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது ஆயுத உதவிகள் தொடர்பாகப் பேசப்பட்டது.

இப்பேச்சுக்களின்போது இந்தியப் பிரதமர் இலங்கைக்குத் தேவையான ஆயுதங்களையும் யுத்த தளபாடங்களையும் வழங்க முன்வந்துள்ளார் என ஆங்கில நாளேடு ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

அதேவேளை, பாகிஸ்தானும் சீனாவும் இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதைத் தவிர்க்கும் முகமாகவே இந்தியா ஆயுதங்களை வழங்க முன்வந்துள்ளது என்றும் அந்த ஆங்கில பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. இதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்? என செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

ஆனால், உண்மை அதுவல்ல. ஜனாதிபதி இந்திய விஜயத்தின்போது ஆயுத உதவி தொடர்பாக இந்தியப் பிரதமரிடம் எவ்விதமான பேச்சுக்களையும் நடத்தவில்லை என்பது உறுதி. பத்திரிகை செய்தி அவர்களின் கற்பனையாக இருக்கலாம் என அமைச்சர் பதில் அளித்தார். (சி)

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர்.

அந்த இடத்துக்கு செல்ல எவரையும் படையினர் அனுமதிக்கவில்லை. வாகனங்கள் தடுக்கப்பட்டன. பொதுமக்களும் வீதியில் மறிக்கப்பட்டனர். குறித்த கொன்ரெயினரில் இருந்த ஆயுதங்கள் வேறு வாகனங்களில் ஏற்றப்பட்டன.

இதனால் சுமார் 4 மணி நேரத்துக்கும் மேலாக அப்பகுதியில் போக்குவரத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. (சி)

## ஒதுக்கீடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ள மனுக்களை விசாரணை செய்வதற்கு உயர்நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

நிதி தொடர்பான முழுமையான அதிகாரம் நாடாளுமன்றுக்கே உள்ளது என்றும்- நிதி ஒதுக்கீடு செய்வது நாடாளுமன்ற அதிகாரத்துக்கு அமையவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பிரதம நீதியர்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தீர்ப்பு வழங்க முடியாது என்று தெரிவித்து குறிப்பிட்ட மனுவை நீதியரசர் தள்ளுபடி செய்தார். (சி)

## கொட்டாஞ்சேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தைக்கு மோட்டார்சைக்கிளில் செவ்வாய்க் கிழமை அவர் சென்றார் எனவும் அதன் பின் அவர் வீடு திரும்பவில்லை என்றும் முறையிடப்பட்டுள்ளது. கடந்த வாரமும் கொட்டாஞ்சேனையில் பெண்ணொருவர் கடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறிது காலமாக கொழும்பில் ஆட்கள் கடத் தப்படுகின்றமை ஓய்ந்திருந்த நிலையில் மீண் டும் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறித்து கொழும்பில் உள்ள தமிழ் மக் கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (சி)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் விளைவாக ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து நானாட்டன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி உள்ளன.

சிலாவத்துறை, முசலி, முள்ளிக்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தபோது, சில நாள்களில் மீண்டும் திரும்பி வரலாம் என்று அரச தரப்பில் மக்களிடம் தெரிவித்ததாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

அதேவேளை -

மன்னாரில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர அனுமதிப்பது குறித்து போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் அரசாங்க சமாதானச் செயலக அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது, பிரஸ்தாபித்த போது, பாதுகாப்பு நிலைமை சீரடைந்த பின்னரே மக்களை அங்கு மீளக்குடியமர அனுமதிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

இப்போது அரசின் குட்டை உடைத்து வெளிப்படுத்தி இருக்கிறார், 25 வருடங்களுக்கு மேலாக மனித உரிமைச் செயற்பாட்டாளராக பணி செய்யும் சர்வதேச மதிப்புப் பெற்ற நிமல்கா பெர்னாண்டோ.

இவர் மன்னார் - நானாட்டான் பகுதிக்குச்சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தவர்.

அவர் அது குறித்து கொழும்பிலிருந்து வெளியாகும் 'மோர்னிங் லீடர்' ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

அரசு மன்னாரில் மேற்கொண்ட ஷெல் வீச்சுக்களினால் அங்கிருந்து தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். இது மிகப் பெரிய மனித உரிமை மீறல்.

வடக்கிலும்-கிழக்கிலும் காணாமல் போதல்களும், கடத்தல்களும் தொடர்கின்றன. தென்னிலங்கையினர் இத்தகையவற்றால் பாதிக்கப்படவில்லை. இருப்பினும் வடக்கு-கிழக்கில் என்ன நடக்கிறது என்பதை அவர்களும் அறிய வேண்டும்- என்றார் நிமல்கா பெர்னாண்டோ.

அரசாங்கத்தின் மனித உரிமை ஆலோசனை குழுவிலிருந்து இம்மாதம் 12ஆம் திகதி ராஜினாமாச் செய்த நான்கு மனித உரிமைச் செயற்பாட்டாளர்களில் நிமல்கா பெர்னாண்டோவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி பற்குணராசா

**(பக்கர், கார்த் தரகர்)**

மானிப்பாய், டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும் சேர்ச் வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்ல தம்பி பற்குணராசா 17.10.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் நல்லதம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற லீலாவதியின் (சங்கானை அரசினர் வைத்தியசாலை) அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரி, விஜயகுமாரி, உதயராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகம்மா, பாக்கியம், கமலாதேவி, சந்திரன் (லண்டன்), ஜெனந்தினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2007) வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேர்ச் வீதி,*
*சங்கானை.*

தகவல்:
**ஜெகதீஸ்வரி (மகள்).**

### திருமதி நடராசா இராசபூபதி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இராசபூபதி நேற்று (17.10.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா நடராசாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் திருமதி சிறிதரன் கிருபாகரியின் (யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம்) அன்புத் தாயும் சின்னத்துரை சிறிதரனின் அன்பு மாமியும் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மாணிக்கலிங்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) சகோதரியும் வேதசொருபீ, திரியம்பாகா, பிரியசங்கர் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2007) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.30மணிக்கு நவாலி, கொத்துக்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*அரசடி, நவாலி.*

தகவல்:
**சின்னத்துரை,**
**சிறிதரன் (மருமகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.